**March 31 - Steering Committee Meeting**

## பங்குனி 31, 2019, வழிப்படுத்து குழுவின் சந்திப்பு

குழுவானது விமலச்சந்திரனுடன் புதிதாக அமைக்கப்பட்ட யோர்க் பலகலைக்கழகத்தின் இரண்டாவது மாணவர் மையத்தை சுற்றிப் பார்வையிடுவதில் இச் சந்திப்பு தொடங்கியது. மாணவர் மையத்தின் வரைபடம், கட்டுமானம், நிகழ்வுகளுக்கான இட வசதிகள் உட்பட்ட பல விடயங்கள் பார்வையிடப்பட்டன.

குழு எதிர்கொள்ளும் பணிகள் ஆராயப்பட்டு இரு பெரும் பிரிவுகளாக வரையறுக்கப்பட்டன.

1. செயற்திட்டக் குழு
2. நிதித் திட்டக் குழு

செயற்திட்டப் பிரிவானது தமிழ்ச் சமூக மையத்தை அமைப்பதற்கான செயற்திட்ட மாதிரி விளக்கம், இதற்கான சாத்தியமான இடத்தை ஆராய்ந்து தேர்வு செய்தல், இவற்றுக்கான பொதுவான நிகழ்ச்சி நிரல் திட்டமிடல் தேவைகள், திட்டத்திற்கான பகுத்தாய்வு, திட்டத்துக்கான நிர்வாக மாதிரி வடிவமைத்தல் ஆகியவற்றைத் தீர்மானிக்கும்.

நிதித்திட்டப் பிரிவானது தமிழ்ச் சமூக மையத்தை அமைப்பதற்கான திட்டத்துக்கு தேவைப்படும் நிதிக்கான உத்தரவாதத்தை அரசாங்கங்களிடம் இருந்தும், சமுதாயத்தில் இருந்தும் திரட்டுவதற்காயன சாத்தியங்களை ஆராய்ந்து தீர்மானிக்கும்.

இப்பணிகளை ஆரம்பிக்கும் நோக்குடன் குழுவானது தனது உறுப்பினர்களிடையே பொறுப்புகளைப் பிரித்துக்கொண்டது.

இணையத்தளம் மூலமான ஆலோசனை கோரும் அணுகுமுறை மாதிரி ஒன்றைக் குழு ஆராய்ந்தது. இதன் பரிந்துரைகள் அடுத்த சந்திப்புக்கு முன்னர் தரவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டது.

குழுவானது பாராளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரியுடனான சந்திப்புக்கான திகதியை உறுதி செய்தது. அத்துடன் மற்றைய தெரிவு செய்யப்பட்ட அரசாங்க உறுப்பினர்களுடனான சந்திப்பின் அத்தியாவசியமும் முன்னெடுக்கப்பட்டது.